புரட்சிப்

# பெரியார் முழக்கம்



திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2054 • நவம்பர் 23, 2023 • புரட்சி 23 • முழக்கம் 45 • விலை ரூ.3.00


## பெரியார் மீது இழிசொற்களை சுமத்தி

# பல்கலையில் பார்ப்பன யாகம்

**திருவாரூர் நீலக்குடியில் மத்திய பல்கலைகழகத்தில் பார்ப்பனர்களைக் கொண்டு நவ.20ல் ‘ஜெய் ஸ்ரீராம்’ முழக்கத்துடன் யாகம் நடத்திய சங்கிகள் பெரியார் மீது இழி சொற்களை வீசியுள்ளனர்.**

நீலக்குடியில் தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகம் உள்ளது. இங்கு 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ - மாணவியர் பயின்று வரும் நிலையில், ஆர்எஸ்எஸ் மாணவர் பிரிவான ஏபிவிபி-யை துணைக்கு வைத்துக்கொண்டு, கடந்த நவம்பர் 17 அன்று “தீபோத்சவ்-2023” என்ற பெயரில் யாகம் வளர்த்தும் ஹோமம் நடத்தப்பட்டுள்ளது. வெளியிலிருந்து புரோகிதர்கள் வரவழைக்கப்பட்டு பூஜைகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த ஹோமத்தில் துணை வேந்தர் கிருஷ்ணன் உள்ளிட்டோர் பங்கேற்க, பல்கலைக்கழகத்தின் கலையரங்க மேடை ‘ஜெய் ஸ்ரீராம்’ வாசகங்களால் அலங்கரிக்கப் பட்டு, முழக்கங்களும் எழுப்பப் பட்டுள்ளன. ‘ஜெய் ஸ்ரீராம்’ என்ற வாசகம் கொண்ட கோலங்கள் வரையப்பட்டுள்ளன. மேலும், கோலம் பாஜக கொடியின் வண்ணத்தில் இருந்துள்ளது.

இந்த நிகழ்ச்சியின்போது ஊடகங்களுக்கு அழைப்பு விடுக்கப்படாத நிலையில், விஷயம் சமூக வலைதளங்கள் மூலமாக தற்போது, வெளிச்சத்திற்கு வந்துள்ளது

திருவாரூர் மத்தியப் பல்கலைக்கழகத்தில் நடந்த இந்த மத நிகழ்வுக்கு மாணவர்கள் மத்தியிலி ருந்து கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது. கண்டனங்களும் எழுந்துள்ளன.

### இந்திய மாணவர் சங்கம் கடும் கண்டனம்

திருவாரூர் மத்தியப் பல்கலைக் கழகத்தில் நடத்தப்பட்ட மத நிகழ்வுக்கு இந்திய மாணவர் சங்கத்தின் மாநிலத் தலைவர் கோ. அரவிந்தசாமி, மாநிலச் செயலாளர் க.நிருபன் சக்கரவர்த்தி ஆகி யோர் கண்டன அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

“பாஜக ஆட்சிக்கு வந்த நாள் முதல் இன்று வரை மத்திய கல்வி நிறுவனங்களை மதவாதிகளின் பயிற்சிப் பட்டறையாக மாற்றும் நிகழ்ச்சி நிரல் தொடர்ந்து செயல் படுத்தப்பட்டு வருகிறது. அதன் விரிவாக்கம்தான் தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் யாக பூஜையில் பங்கெடுத்தது ஆகும்.

அறிவியல் அடிப்படையிலான கல்வியை மறுத்து அறிவியலுக்கு எதிரான மூட நம்பிக்கைகளைப் புகுத்துவதும், கல்வி நிறுவனங்க ளில் சாதி, மதம், மொழி, இனம் சார்ந்த பிரிவினைக் கருத்துகளை விதைப்பதும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. கல்வி நிலையங்களில் அதற்கான வேலை யைப் பாஜக மாணவர் அமைப்பான ஏபிவிபி செய்து வருகிறது.

பல்கலைக்கழகத்தில் நடக்கும் பொது நிகழ்ச்சிகளில் மாணவர்கள் மத்தியில் மதவாதத்தை விதைத்து கல்வி நிறுவனங்களைக் காவிக் கூடாரமாக மாற்றத் துடிக்கும் மத அடிப்படைவாதிகளின் நய வஞ்சக செயலைத் தமிழ்நாடு அரசு கண்டிக்க வேண்டும்.

### பெரியாரை இழிவுபடுத்திய ஏபிவிபி

மேலும், மதவாதத்திற்கு கொடி பிடிக்கும் பல்கலைக்கழக நிர்வாகத்தின் செயல்பாடுகளைக் கண்டித்து இந்திய மாணவர் சங்கத்தின் மத்தியப் பல்கலைக் கழகக் கிளை ஒரு அறிக்கை வெளியிட்டிருந்தது. அதற்கு எதிர் அறிக்கை வெளியிட்டுள்ள ‘ஏபிவிபி’, அதில் தந்தை பெரியாரை பிரிட்டீஷ் ஆட்சி காலை நக்கிய ஈ.வெ.ராமசாமி நாயக்கர், இந்து பண்டிகைகளை எதிர்த்தவர், அவர் கொள்கைகளை ஏற்றுக்கொண்டவர்களே யாகத்தை எதிர்க்கிறார்கள் என்று வசைபாடியுள்ளது. ஏபிவிபி என்னும் பெயரில் அறிக்கை வெளியிட்டுள்ள மத அடிப்படைவாதிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும், கல்வி நிலையங்களில் மாணவர்களின் சமத்துவத்தைப் பாதுகாக்க வேண்டும்” என்றும் இந்திய மாணவர் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

# காஞ்சி - ஏற்காட்டில் சனாதன முகமூடி கிழிப்பு




**சேலம் :** ஏற்காடு ஒன்றியக் கழகத்தின் சார்பில் எது சனாதனம்? எது திராவிடம்? தெருமுனைக் கூட்டமானது 18.11.2023 சனிக்கிழமை தொடங்கியது.

ஏற்காடு டவுன், ஒண்டிக்கடை அண்ணாசிலை, நாகலூர், செம்மநத்தம், பெரியக்காடு உள்ளிட்ட இடங்களில் நடைபெற்றது.

விரட்டு கலைக் குழுவின் பறை இசையுடன் கூட்டம் தொடங்கியது. பாரி வள்ளல் அவர்களின் பறை இசை முழக்கம் பொது மக்களிடையே கவனம் ஈர்த்தது.

குபேந்திரன் - மதன் - பொன்ராஜ் ஆகியோர் பரப்புரை பாடல்களை பாடினர். தொடர்ந்து ஆனந்த் - பொன்ராஜ் குழுவின் அரசியல் நையாண்டி கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற கூட்டத்திற்கு கழக ஏற்காடு ஒன்றியச் செயலாளர் கார்த்திகேயன் தலைமை தாங்கினார்.

சேலம் மாவட்ட அமைப்பாளர் ஏற்காடு பெருமாள், சேலம் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஏற்காடு தேவபிரகாசு, பெரியார் பெருந்தொண்டர் தேவதாசு, திமுக ஒன்றிய செயலாளர் ராஜா ஆகியோர் கருத்துரையாற்றினார்கள்.

பள்ளி, கல்லூரி மாணவர்கள், சுற்றுலா பயணிகள், பொதுமக்கள் என அனைவரும் கூட்டத்தை ஆர்வமுடன் கவனித்தனர்.

ஏற்காடு ஜாஸ்மி ஸ்ரீ கூற முதல்நாள் கூட்டம் நிறைவடைந்தது.

தொடர்ந்து இரண்டாவது நாளாக 19.11.2023 ஞாயிறு அன்று வெள்ளக்கடை, ஜெரினாகாடு, முண்டகாம்பாடி உள்ளிட்ட இடங்களில் தெருமுனைக் கூட்டங்கள் நடைபெற்றது.

பெரியார் விழுதுகள் தமிழினி, பண்பரசி, தென்றல், ஜாஸ்மி ஸ்ரீ ஆகியோருடன் விரட்டு கலைக் குழுவுடன் இணைந்து வீதி நாடகத்தை நடத்தினார்.

ஏற்காடு தமிழச்செல்வி தலைமை தாங்கினார், ஏற்காடு நான்ஷி முன்னிலை வகித்தார். சேலம் மாவட்ட அமைப்பாளர் ஏற்காடு பெருமாள், சேலம் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஏற்காடு தேவபிரகாசு,

திராவிட முன்னேற்றக் கழகத்தை சார்ந்த தனலட்சுமி தோழர்களுக்கு தேநீர் வழங்கினார். ஏற்காடு தமிழினி நன்றி கூற கூட்டம் நிறைவுற்றது.

கலந்துகொண்ட தோழர்கள்: ஏற்காடு பகுதி தோழர்கள் கார்த்திகேயன்,டேவிட், செல்வமூர்த்தி, சிலம்பரசன், தவசி, சிற்பி ஆனந்தராசு, சுதாகர், சந்தோஷ், சேகுவேரா, ஞானசேகரன் , முண்டகாம்படி சங்கீதா, சுடர், கமலினி, நங்கவள்ளி பகுதி கிருஷ்ணன், பிரபாகரன், ஆர்.எஸ். பகுதி நாகராஜ், ராமச்சந்திரன், இளம்பிள்ளை தங்கதுரை, கோபி, சேலம் தேவராஜ், வெள்ளார் சிவா, அருண்குமார், சசிகுமார், சர்மா ஆகியோர்.

**காஞ்சிபுரம் :** எது திராவிடம்? எது சனாதனம்? தெருமுனைக் கூட்டம் காஞ்சிபுரம் மாவட்டம் வாலாஜாபாத் பேருந்து நிலையம் அருகில் 18.11.2023 சனிக்கிழமை காலை 11 மணிக்கு தொடங்கியது.

சம்பத் - பேரன்பு ஆகியோரின் பரப்புரை பாடல்களுடன் கூட்டம் தொடங்கியது. கழக காஞ்சிபுரம் மாவட்டச் செயலாளர் இரவிபாரதி தலைமை உரையாற்றினார்.

விசிக முன்னாள் காஞ்சி மாவட்ட செயலாளர் பாசறை செல்வராஜ், தமிழ் உரிமை கூட்டமைப்பு ஒருங்கிணைப்பாளர் காஞ்சி அமுதன், விசிக பேரூராட்சி மன்ற உறுப்பினர் அசோக்குமார், தன்னாட்சி தமிழகம் தாண்டவமூர்த்தி, தமிழக மக்கள் முன்னணி அன்பு ஆகியோர் கருத்துரையாற்றினர்.

இரண்டாவது கூட்டம் பெரியார் தூண் அருகிலும், நிறைவுக் கூட்டம் மாலை 6 மணிக்கு சின்ன காஞ்சிபுரம் டோல்கேட் அருகிலும் நடைபெற்றது.

கூட்டத் தொடக்கமாக கப்பலோட்டிய தமிழர் வ.உ.சி நினைவு நாளை ஒட்டி அவரது உருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

பின்னர் காஞ்சி மக்கள் மன்றம், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, திராவிட இயக்கத் தமிழர் பேரவை உட்பட தோழமை இயக்க நிர்வாகிகள் கலந்து கொண்டு கூட்டத்தின் நோக்கத்தை விளக்கி உரையாற்றினர்.

காஞ்சிபுரம் மாவட்டச் செயலாளர் இரவிபாரதி தெருமுனைக் கூட்டத்தை ஏற்பாடு செய்தார்.

## தலையங்கம்

# ஆளுநரின் ஆணவத்துக்கு சாட்டை அடி

தமிழ்நாடு ஆளுநர் தமிழக அரசியலில் தொடங்கி வைத்த ‘அரசியல் நாடகத்தில்’ இப்போது அவர் சிறந்த சிரிப்பு நடிகராக மக்கள் மத்தியில் காட்சியளிக்கிறார். மக்கள் இவர் தோன்றும் காட்சிகளில் ‘விலா’ நோக சிரித்து கைதட்டி மகிழ்ச்சிக் கூத்தாடுகிறார்கள். பொதுவாக ஆளுநர் என்றால் அவர் விமர்சனங்களுக்கு அப்பாற்பட்ட அரசியல் சட்டத்தின் முதன்மைப் பிரதிநிதி என்று பார்க்கப்பட்டார்கள். அதை கட்டவிழ்த்துள்ளார் ஆளுநர்.

அமித்ஷா தனக்கு கேடயமாக இருந்து நற்சான்று வழங்குவார் என்ற ஆளுநரின் அற்பத்தனமான அரசியல் செயல்பாடுகளுக்கு உச்சநீதிமன்றம் சாட்டையடிக் கொடுத்துள்ளது. ‘‘அரசியல் சட்டத்தை திருப்பிப் பாருங்கள்; அமித்ஷாவுக்கு வால் பிடிக்காதீர்கள்’’ என்ற செய்தியை ஆளுநருக்கு எச்சரிக்கையாக விடப்பட்டிருக்கிறது.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியின் வலிமையை தமிழ்நாடு முதல்வர் ஆளுநருக்கு உணர்த்திவிட்டார். உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு தொடர்ந்த வழக்கு – இந்திய அரசியலையே தமிழக முதல்வரை திரும்பிப் பார்க்க வைத்திருக்கிறது. வழக்குத் தொடர்ந்த பிறகு உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி எழுப்பிய கேள்விகளுக்குப் பிறகு நடுங்கிப் போன ஆளுநர் மூன்று ஆண்டுகளாக கிடப்பில் போடப்பட்டிருந்த பத்து மசோதாக்களின் ஒப்புதலை நிறுத்தி திருப்பி அனுப்பியிருக்கிறார். ‘‘கிடப்பிலே நீண்டகாலம் போட்டு வைப்பேன்; கிடப்பில் என்னால் போடப்பட்ட மசோதாக்கள் இறந்து போய்விட்டதாகவே அர்த்தம்’’ என்று ஆணவமாக பேசினார் தமிழக ஆளுநர். இப்போது மசோதாக்கள் செத்துப் போகவில்லை, உயிர் இருக்கிறது என்று ஒப்புக்கொண்டு திருப்பி அனுப்பியிருப்பது தமிழக அரசுக்குக் கிடைத்த முதல் வெற்றி. ‘‘கீழே விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை’’ என்ற கிராமத்து பழமொழி போல, மசோதாவை திருப்பி அனுப்பினாலும், அதற்கு ஒப்புதல் கிடையாது என்றார். இரண்டே நாட்களில் சிறப்பு சட்டமன்றத்தைக் கூட்டி ஆளுநர் திருப்பி அனுப்பிய மசோதாக்களை மீண்டும் நிறைவேற்றி பதிலடி தந்தது தமிழ்நாடு அரசு. திருப்பி அனுப்பிய மசோதாவை கிடப்பில் போடலாம், இல்லாவிட்டால் குடியரசு தலைவருக்கு அனுப்பலாம் என்று கனவு கண்டார் ஆளுநர். அதற்கும் உச்சநீதிமன்றம் கிடுக்குப்பிடி போட்டுவிட்டது.

‘‘2020ஆம் ஆண்டிலிருந்து இந்த மசோதாக்கள் ஆளுநரிடம் 3 ஆண்டுகளாக கிடப்பிலே போடப்பட்டிருக்கிறது. (தமிழ்நாடு அரசு வழக்கில்) நாங்கள் ஆளுநருக்கு நோட்டீஸ் அனுப்பிய பிறகுதான், மாசோதாவுக்கு ஒப்புதல் தரமால் திருப்பி அனுப்பியிருக்கிறார். சட்டமன்றத்தில் மீண்டும் நிறைவேற்றப்பட்ட இந்த மசோதாக்களை மீண்டும் நிறுத்தி வைக்கமுடியாது’’ என்று உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி கருத்து தெரிவித்துள்ளார். இதைத் தொடர்ந்து அதிமுக அமைச்சர்கள் சி.விஜயபாஸ்கர், பி.வி.ரமணா அகியோர் மீதான குட்கா ஊழல் விசாரணைக்கு ஆளுநர் அனுமதித்துள்ளார்.

உச்சநீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ள போது தமிழக சட்டமன்றத்தை ஏன் கூட்ட வேண்டும் என்று ஆளுநருக்கு மறைமுகமாக ஆதரவு தெரிவித்து பேசிய எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி, இப்போது சட்டமன்றக் கூட்டத்தின் தாக்கத்தை உணர்ந்திருப்பார் என்றே நம்புகிறோம். தனது அமைச்சரவையில் இடம்பெற்றிருந்தோர் மீதே ஆளுநர் ஊழல் விசாரணைக்கு ஒப்புதல் அளித்துவிட்ட நிலையில் எடப்பாடி பழனிசாமி மவுனமாகிவிட்டார்.

ஒன்றிய ஆட்சியின் அத்துமீறல்கள் மற்றும் சமுகநீதி துரோகங்களை எதிர்த்து மக்கள் மன்றத்திலும், சட்டமன்றத்திலும் போராட்டங்களை நடத்திவரும் தமிழக முதல்வர் ஒவ்வொன்றிலும் வெற்றிப்படிகளில் முன்னேறி வருகிறார்.

மருத்துவ உயர் பட்டப்படிப்பில் அகில இந்திய கோட்டாவில் பிற்படுத்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு வழங்க மறுத்த ஒன்றிய ஆட்சியை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து இந்தியாவில் உள்ள மாநிலங்களுக்கும் பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டு உரிமையைப் பெற்றுத் தந்தவர் தமிழக முதல்வர்.

ஒவ்வொரு மாநிலத்திலும் மருத்துவக் கல்லூரிகள் திறப்பதற்கு இலக்கு நிர்ணயித்து மருத்துவ கவுன்சில் பிறப்பித்த உத்தரவை எதிர்த்து முதல் குரல் கொடுத்த மாநிலம் தமிழ்நாடு. இந்த எதிர்ப்புகளுக்குப் பிறகு அந்த உத்தரவு திரும்பப் பெறப்பட்டுள்ளது. இது தமிழ்நாடு அரசுக்கு கிடைத்த மற்றொரு வெற்றி.

ஒன்றிய மதவெறி ஆட்சிக்கு எதிராக அனைத்து எதிர்க்கட்சிகளையும் ஒரே குடையின் கீழ் திரட்டி தமிழக முதல்வர் எடுத்த முயற்சியால் தான் ‘இந்தியா’ கூட்டணி இப்போது வலிமையுடன் உருவாகியுள்ளது.

தமிழக முதல்வரின் பெண்ணுரிமைக்கான திட்டங்களை இப்போது இந்தியாவில் அனைத்து மாநிலங்களிலும் அரசியல் கட்சிகள் ஏற்றுக்கொண்டு தேர்தல் அறிக்கைகளாக வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்கள். ‘இலவசங்கள்’ என்று கொச்சைப்படுத்தி எதிர்த்துவந்த பாஜகவும் இப்போது தமிழக அரசின் மக்கள் நலத் திட்டங்களை ஏற்கும் நிலைக்கு தள்ளப்பட்டு தேர்தல் அறிக்கையில் இடம்பெறச் செய்துள்ளன.

சமூகநீதி, மாநில உரிமை, மதவெறி எதிர்ப்பு என்ற ‘திராவிட மாடல்’ இந்தியாவில் இந்தி பேசும் மாநிலங்களின் மாடலாகவும் இப்போது மாறி நிற்கிறது. ஆளுநர்களின் அத்துமீறல்களுக்கு கடிவாளம் போடும் இந்த முயற்சியும், ‘நீட்’க்கு எதிரான மக்கள் இயக்கங்களும் தமிழ்நாட்டை புகழின் உச்சிக்கு கொண்டு செல்லும் என்பது உறுதி!

# ‘சூர’ சம்ஹாரம்

இந்துமதம் அஹிம்சையை வலியுறுத்துகிறது என்கிறார்கள் அதன் பிரச்சார செயலாளர்கள். அதற்காக ‘இம்சையை’ அதாவது கொலையை நியாயப்படுத்துகிறார்கள். அதற்கு ‘சம்ஹாரம்’ என்று ‘திரு நாமம்’ சூட்டியிருக்கிறார்கள்.

மாவோயிஸ்ட்கள் ஒரு காலத்தில் சோசலிசப் புரட்சிக்காக வர்க்க எதிரிகளை அழித்தொழித்தல் – அதாவது ‘சம்ஹாரம்’ செய்வதை கொள்கையாகக் கொண்டிருந்தனர். பிறகு அந்தக் கொள்கையை கைவிட்டாலும், இன்றுவரை ஆட்சியாளர்கள் அவர்களை பயங்கரவாதிகள் என்றே கூறுகிறார்கள். முருகன் சூரனை அழித்தால் அது பக்தி; மாவோயிஸ்டுகள் சம்ஹாரம் செய்தால் அது பயங்கரவாதமா என்று கேட்கிறார். ஒரு பெரியாரிஸ்ட்! கேள்வி நியாயமானது தான், ஆனால் வேத மதத்தில் அவாள் எது செய்தாலும் அது தர்மம், தேசத் தந்தை காந்தியை ‘சம்ஹாரம்’ செய்தான் கோட்சே. இது ’காந்தி சம்ஹாரம்’ தான் சம்ஹாரத்தை நியாயப்படுத்தும் கூட்டத்துக்கு ‘தேசபக்தர்கள்’ என்ற பெயரும் இந்துத்துவ அகராதியில் உண்டு!

புராணகாலத்திலேயே தேவர்களான பார்ப்பனர்கள் ‘தீவிரவாத தடுப்புக் குழு’ ஒன்றை உருவாக்கியிருப்பார்கள் போல.! அதில் சிவன், விஷ்ணு போன்றவர்கள் நிரந்தர தலைமை இயக்குனர்கள். மாறுவேடம் அணிந்து தங்களின் பிராமண வேத ஆதிக்க எதிரிகளை அடையாளம் காண்பார்கள். கடலுக்குள் மூழ்குவார்கள்,நெருப்பிலிருந்து எழுவார்கள், வன விலங்குகளாக அவதரித்து சம்ஹாரம் செய்துவிடுவார்கள், அப்போதெல்லாம் சம்ஹாரத்துக்கு தடை சட்டமோ, விசாரணையோ இல்லை. ‘சம்பூகனை சம்ஹாரம்’ செய்த ராமன் மீது எந்த குற்றவியல் சட்டமும் பாயவில்லை. மாறாக அவனுக்கு அயோத்தியில் கோயில் கட்டி விரைவில் தேர்தல் விழா நடக்கப் போகிறது.

சத்திரியர்களுக்கு இடையே பிளவையும் குடும்பப் பகையையும் உருவாக்கிய கிருஷ்ண பகவான் ‘அழித் தொழிப்பே’ தர்மம் என்றான்; அந்த; ‘தர்மம்’ தான் இப்போது பாரதத்தின் தர்மம். கிருஷ்ணனும், ராமனும் இப்போது பாரதத்தின் தேசிய தலைவர்கள். ‘பாரத ரத்னா’ விருது கூட கிடைக்கலாம்.

தபோல்கர், பன்சாரே, கவுரி லங்கேஷ், கல்புர்கி போன்ற பகுத்தறிவாளர்கள் ‘இந்துத்துவா அரசியலை எதிர்த்தவர்கள்’ என்பதற்காக ‘சம்ஹாரம்’ செய்யப்பட்டார்கள். ஆண்டுகள் பல ஓடியும் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்ட பிறகும் அவர்கள் மீது நடவடிக்கை இல்லை. வழக்கும் அநேகமாக மூடுவிழா செய்யப்பட்டது. சம்ஹாரம் செய்த இந்த தேச பக்தர்களுக்கு வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பாஜக வேட்பாளர்களாக நிறுத்தப்பட நல்ல வாய்ப்பு இருக்கிறது.

புராண காலங்களில் மட்டுமல்ல, இந்த மோடி காலத்திலும் ‘சூர சம்ஹாரம்’ புனிதம் தான். பசுவுக்காக மனிதனை ‘சம்ஹாரம்’ செய்வார்கள். சென்னையில் இப்போது வீதிகளில் திரியும் பசுக்கள் மனிதர்களை வதம் செய்யத் தொடங்கி விட்டதே என்று கேட்கிறார் ஒரு தோழர். திருவல்லிக்கேனியில் வைதீக பிராமணர் ஒருவரே பசுவின் சம்ஹாரத்துக்கு உள்ளகிவிட்டார். உடனே பசுக் காவலர்கள் பசு மாட்டின் உரிமையாளர்கள் மீது பாய்கிறார்கள். ‘பசுவை’ கைகழுவி விட்டனர். ‘சம்ஹாரங்களில் கூட எது நியாயம், எது தவறு என்பதற்கு அவாள் பாதுகாப்புத்தான் முதன்மையாகிறது.

நரகாசூரனை விஷ்ணு பன்றி அவதாரம் எடுத்து கொலை செய்த தீபாவளிக்கு முதல்வர் ஏன் வாழ்த்து சொல்லவில்லை என்று கேட்கிறார்கள். கொலை செய்யப்பட்ட நாளை விழா எடுத்துக் கொண்டாடலாமா என்று கேட்டால், அதுதான் கலாச்சாரம் என்கிறார்கள்.

இந்திய தண்டனைச் சட்டம், குற்றவியல் சட்டங்களோ, சம்ஹாரங்களை குற்றம் என்கிறது. வேத மதச் சட்டங்கள் சம்ஹாரத்தை புனிதம் என்று கூறி மக்களையும் கொண்டாட கட்டாயப்படுத்துகிறது. தட்டிக் கேட்டால் நீ இந்து விரோதி அமுலாக்கத்துறையை அனுப்பி அரசியல் சம்ஹாரம் செய்துவிடுவார்கள். டெல்லியில் ராமலீலா நடத்தி ராவணனை சம்ஹாரம் செய்கிறவர்களும் இவர்கள் தான். பாலஸ்தீனர்கள் மீது இஸ்ரேல் நடத்தும் சம்ஹாரத்தை நியாயப்படுத்துபவர்களும் இவர்கள் தான்.

இந்த சம்ஹார கொடுமையையே சம்ஹாரம் செய்தாக வேண்டும் என்று சொன்ன தலைவர்கள் தான் பெரியார், அம்பேத்கர். ஆமாம் இன அழிப்பு தத்துவத்தைத்தான் சம்ஹாரம் செய்ய வேண்டும்.

– கோடங்குடி மாரிமுத்து

# தோழர் சங்கரய்யாவுக்கு வீர வணக்கம்



பொதுவுடமை இயக்கத்தின் மூத்த தலைவர் தோழர் சங்கரய்யா (102) 15.11.2023 புதன்கிழமை அன்று விடைபெற்றார். பொது வாழ்க்கை வேறு, தனி வாழ்க்கை வேறு என்று பிரித்துப் பார்க்காமல் தங்களுடைய வாழ்கையை பொது வாழ்வுக்கு ஒப்படைத்த தலைவர்களைக் கொண்ட மாநிலம் தமிழ்நாடு. அவர்களது வாழ்க்கை தெளிவான நீரோட்டம் போல் அமைந்துள்ள காரணத்தால், அவர்கள் வாழ்நாளிலும் நீண்டகாலம் வாழ்வதற்கு நல் வாய்ப்பாக அமைந்துவிட்டது. தமிழ்நாடு இத்தகைய பண்பாடு மிக்க தலைவர்களைக் கொண்ட மாநிலம் என்பதால் கடந்த காலங்களில் எத்தனை கருத்து வேறுபாடுகள், முரண்பாடுகள் களத்தில் விவாதிக்கப்பட்டாலும் தலைவர்களுக்குள்ளே மதிக்கத்தக்க மாண்பும், மரியாதையும் தமிழ்நாட்டில் பேணிப் பாதுகாக்கப்பட்டது.

சங்கரய்யாவின் பொதுவாழ்க்கை நுழைவு 1938 ஆம் ஆண்டு இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தில் தொடங்கியது. பின்னர் பொதுவுடமைக் கட்சியில் இணைந்து மாணவர் பருவம் தொட்டே சுதந்திரப் போராட்டத்தில் அவர் ஈடுபட்டார்.

பொதுவுடமைக் கொள்கையிலும், தொழிலாளர் உரிமையிலும், ஜாதித் தீண்டாமை மறுப்பு கொள்கையிலும் அவர் உறுதியாக வாழ்ந்தார். தனது 95 வயது வரை ஆணவப் படுகொலைகளுக்கு எதிராக குரல் கொடுத்த அவர், பொதுவுடமைக் கொள்கையும், ஜாதி ஒழிப்பும் இணைந்த இலட்சிய வீரராகத் திகழ்ந்து தமிழ்நாடு அரசின் முதல் தகைசால் தமிழர் விருதைப் பெற்ற பெருமைக்குரிய அவரது இழப்பு என்பது இன்றைய பொது வாழ்க்கைக்கு மிகப்பெரிய இழப்பு தான். தனது குடும்பத்தில் ஜாதி மறுப்புத் திருமணங்களையே செய்தார்.

அரசியலுக்கு வரக்கூடிய இலட்சியத் துடிப்புமிக்க இளைஞர்கள் பாடமாக கற்று பொது வாழ்க்கையில் முன்னுதாரணமாகத் திகழ வேண்டும் என்பது தான் சங்கரய்யா போன்ற உண்மையான அப்பழுக்கற்ற கொள்கைவாதிகள் விட்டுச் சென்றிருக்கிற கொள்கை ஆகும். திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் தோழர் சங்கரய்யா அவர்களுக்கு வீர வணக்கம்!

கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், தலைமைக்குழு உறுப்பினர் அன்பு. தனசேகர், சென்னை மாவட்டச் செயலாளர் இரா.உமாபதி, மாவட்டத் தலைவர் வேழவேந்தன், காஞ்சிபுரம் மாவட்டச் செயலாளர் இரவிபாரதி மற்றும் கழகத் தோழர்கள் மலர் வளையம் வைத்து வீரவணக்கம் செலுத்துனர்.

## மோடி ஆட்சி இஸ்ரேலை ஆதரிப்பது ஏன் (4)

# ஒரே நேர்கோட்டில் யூதர்கள் – பார்ப்பனியம்

### விடுதலை இராசேந்திரன்

உலக நாடுகளின் எஜமானனாகத் தன்னைக் கருதிக் கொண்டு செயல்பட்டு வரும் அமெரிக்கா, இஸ்ரேலின் யூதவெறிக்கு - பட்டுக் கம்பளம் விரித்துக் கொண்டு, அரபு, இஸ்லாமிய நாடுகளை எதிரிகளாகக் கருதி செயல்பட்டு வருவதற்கு என்ன காரணம்? அமெரிக்காவில் ஆட்சி அதிகாரத்தை - ஆட்டிப் படைத்து வரும் யூதர்களின் நிர்ப்பந்தம், இதற்கு ஒரு முக்கிய காரணம்! இந்தியாவின் ஆட்சி அதிகாரத்தைப் பார்ப்பனர்கள் தங்கள் கைப்பிடிக்குள் வைத்திருப்பதுபோல்தான், அமெரிக்காவில் யூதர்கள் - இந்தியாவில் பார்ப்பனர்கள்! அரபு மக்களையும், இஸ்லாமியர்களையும் தங்களது எதிரிகளாகக் கருதுகிறார்கள் யூதர்கள். இங்கே இந்தியாவில் பார்ப்பனர்கள், இந்து மதக் கட்டமைப்புக்கு அடிமைப்பட மறுக்கும் இஸ்லாமியர்களையும், அந்தக் கட்டமைப்புக்குள்ளே இருந்து கொண்டு போராடும் தலித் மக்கள், ஒடுக்கப்பட்ட மக்களையும் தங்களது எதிரியாகக் கருதுகிறார்கள்.

யூதர்களும் - ஆரியப் பார்ப்பனர்களும் சிந்தனையில் ஒன்றுபட்டு நிற்பதற்கு ஏராளமான எடுத்துக்காட்டுகளைக் கூறலாம்! இரண்டு சம்பவங்களை உதாரணத்துக்குக் குறிப்பிடுவோம். 1967-ம் ஆண்டு-பாலஸ்தீனத்துக்கு எதிராக இஸ்ரேல் 6 நாட்கள் போர் நடத்தியது. பல்லாயிரக்கணக்கான பாலஸ்தீனர்கள், அப்போது, சொந்த நாட்டை விட்டு வெளியேறினார்கள். அப்போது ஆர்.எஸ்.எஸ்.ின் அதிகாரபூர்வ ஏடு ஆர்கனைசர் இவ்வாறு எழுதியது:

‘இஸ்ரேலியப் படைகள் போரிடுவதை - வெற்றிகளைக் குவித்திருப்பதைப் பார்க்கும்போது, நமது கலாச்சாரமும் வெற்றி பெற்று, உலகில் நம்மைச் சரியான இடத்தில் கொண்டு போய் நிறுத்தப்போகிறது. யூத மதத்தின் கருத்துகள், நமது வேதங்களையும் இந்து தர்ம சாஸ்திரங்களையும் சமூகப் பழக்கவழக்கங்களையும் அடிப்படையாகக் கொண்டிருக்கிறது” - (ஆர்கனைசர் - 18.6.67)

ஆர்கனைசர் சொல்வதும் உண்மைதான். ‘யூதர்கள்தான் சிறந்த மனிதர்கள். அவர்கள் கடவுளால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள்” என்கிறது யூதக் கோட்பாடு! அது போல - பிராமணர்கள் தான் உயர்ந்தவர்கள் அவர்கள் பிரம்மாவின் தலையிலிருந்து பிறந்தவர்கள் என்கிறது பார்ப்பன வேதமான புருஷ சுக்தா. இதை, ஆர்.எஸ்.எஸ். தத்துவத் தலைவர் கோல்வாக்கரும் மறவாமல் வலியுறுத்துகிறார்.

‘புருஷ சுக்தாவில் நம்மை உருவாக்கிய கடவுள் யார் என்பது கூறப்பட்டிருக்கிறது. அதுவே நமது இனத்தின் அடையாளம் பிராமணர் நமது கடவுளின் தலை”

- (Bunch of Thoughts- நூலில் கோல்வாக்கர்)

தங்களுடைய மதச் சடங்குகளுக்காகச் சமூகத்திலிருந்து தங்களைத் தனிமைப்படுத்திக் கொண்டு தனிக்குடியிருப்புகளை உருவாக்கிக் கொண்டவர்கள் யூதர்கள். பார்ப்பனர்களும் தங்களது வேதப் பார்ப்பனியச் சடங்குகள் வலியுறுத்தும் தீண்டாமையைக் கடைப்பிடிக்க - தங்களுக்குத் தனிக்குடியிருப்புகளை அக்கிரகாரங்கள் என்று ஏற்படுத்திக் கொண்டவர்கள்! இந்தியா இந்துக்களின் தேசம் என்று - இங்கே சங் பரிவாரங்கள் முழங்குகின்றன. பாலஸ்தீனத்தைப் படிப்படியாக அபகரித்து, அங்கு வாழ்ந்த மக்களை விரட்டி அடித்து, அகதிகளாக்கி விட்டு - உலகம் முழுவதும் வாழ்ந்த யூதர்களை எல்லாம் அழைத்து இஸ்ரேல் என்ற யூதத் தாயகத்தை உருவாக்கியவர்கள் யூதர்கள்! இந்தியாவில் பிறந்தாலும் இந்துக்கள் அல்லாதவர்களை இந்தியர்களாக அங்கீகரிக்க முடியாது. அவர்கள் தேசத்துரோகிகள் என்று வெறிக்கூச்சல் போடுகிறவர்கள், சங் பரிவாரங்கள்! ஹீப்ரு மொழியைத் தெய்வீக மொழியாகக் கூறுகிறவர்கள் யூதர்கள் என்றால், சமஸ்கிருதத்தை தேவபாஷை என்பவர்கள் சங் பரிவாரங்கள்! எனவே யூதர்களும் - பார்ப்பனர்களும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள் தான்!

இந்தியாவின் ஆட்சி அதிகாரம் பார்ப்பனர்களிடமும், பொருளாதாரம் - பார்ப்பனர்களுக்குக் கட்டுப்பட்டுள்ள பனியாக்களிடம் சிக்கியிருக்கிறது. அமெரிக்காவில் அரசியல், பொருளாதாரம் இரண்டையுமே ஆட்டிப் படைக்கிறவர்கள் யூதர்கள்தான். இது பற்றி ஏராளமான ஆய்வுகளும் - புள்ளி விவரங்களும் வெளிவந்திருக்கின்றன.

அமெரிக்காவின் முதல் குடியரசுத் தலைவரான ஜார்ஜ் வாஷிங்டன் - யூதர்களைக் கடுமையாக விமர்சித்தவர்! ‘எதிரி ராணுவத்தை விட பல நூறு மடங்கு ஆபத்தானவர்கள் யூதர்கள். அமெரிக்கர்களின் மகிழ்ச்சியையும், சுமுகமான வாழ்வையும், அபகரிக்கும் கும்பல் அது! இதை நான் வேதனையோடு தெரிவிக்கிறேன்” என்றார் ஜார்ஜ் வாஷிங்டன்! அமெரிக்க சமூகத்தின் எதிரிகள் என்று அவரால் பிரகடனப்படுத்தப்பட்ட அதே யூதர்கள்தான், இன்று அமெரிக்க பொருளாதாரத்தையும் அரசியலையும் ஆட்டிப் படைக்கும் சக்தியாகத் திகழ்கிறார்கள்! மோடியின் பிரதம அமைச்சகத்தில் தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்டவர்கள் 3 மட்டுமே.

இந்தியாவின் ஆட்சி, அதிகாரம் - பார்ப்பனர்களிடம் தங்கி இருப்பது போலவே - அமெரிக்க ஆட்சியை ஆட்டிப் படைக்கும் அதிகாரம் படைத்தவர்களாக யூதர்களே இருக்கிறார்கள். அமெரிக்க நாட்டின் குடியரசுத் தலைவர்கள் அனைவரும், (அதன் முதல் குடியரசுத் தலைவர் வாஷிங்டன் நீங்கலாக) யூதர்களின் கைப்பாவைகளாக செயல்பட்டு வந்திருப்பதே - கடந்த கால அமெரிக்க அரசியல் வரலாறு.

17-ம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து அமெரிக்காவில் யூதர்களின் குடியேற்றம் துவங்கியது. ரோத் தீவு, நியூயார்க், பென்சில்வேனியா, தெற்கு கரோலினா பகுதிகளில் அவர்கள் குடியேறினார்கள். அமெரிக்கா சுதந்திரம் பெறுவதற்கு முன்பே, குடியேறிய யூதர்கள் அந்நாட்டின் அரசியல் நடவடிக்கைகளிலும், உள்நாட்டு போர்களிலும் பங்கேற்று வந்ததோடு, தங்களின் யூதக் கலாச்சாரத்தைப் பரப்புவதில் தீவிரமாகச் செயல்பட்டு வந்தனர். ஏராளமான நூல்களை அச்சிட்டுப் பரப்பினர். படிப்பறிவு இல்லாதவர்களாகவும், சிறிய பெட்டிக் கடைகளை வைத்தும் பிழைப்பு நடத்தி வந்த யூதர்கள், அமெரிக்காவில் உள்நாட்டுப் போர் தொடங்கிய காலத்தில், யுத்த சூழலைப் பயன்படுத்தி, தங்களது வர்த்தகத்தை வளர்த்துக் கொண்டனர். பலர் பெரும் பணக்காரர்கள் ஆனார்கள். ஆடைகள் தயாரிப்பு நிறுவனங்களைப் பலர் தொடங்கினார்கள். உள்நாட்டுப் போர் முடிந்த பிறகு, நுகர்பொருள் சந்தையை யூதர்கள் பிடித்தனர். தொடர்ந்து, யூதர்கள் குடியேற்றம் நடந்து கொண்டே இருந்தன. இப்போது நியூயார்க் நகரம் - யூதர்களின் நகரம் என்றே அழைக்கப்படுகிறது. அமெரிக்க மொத்த மக்கள் தொகையில் - யூதர்களின் எண்ணிக்கை 2.2 சதவீதம்தான். (சுமார் 61 லட்சத்து 55 ஆயிரம் மக்கள்) ஆனால், வழக்கறிஞர்கள், மருத்துவர்கள், பேராசிரியர்கள், விஞ்ஞானிகளில் யூதர்களின் ஆதிக்கம்தான் கொடி கட்டிப் பறக்கிறது. பப்ளிக் இன்ட்ரஸ்ட் (Public Interest) என்ற அமெரிக்க ஆராய்ச்சி இதழ் ஒன்று, அண்மையில் வெளியிட்ட ஓர் ஆய்வில், திடுக்கிடும் தகவல் ஒன்று வெளிவந்தது. அந்நாட்டின் மிகப் பெரும் அறிஞர்கள் 70 பேர் என்ற பட்டியலில் - 50 சதவீதத்துக்கும் அதிகமான இடங்களைப் பிடித்துக் கொண்டி ருப்பவர்கள், அந்நாட்டில் 2.2 சதவீதமாக மட்டும் இருக்கும் யூதர்கள்தான்.

அமெரிக்க நாட்டின் பொருளாதாரத்துக்கு இணையாக, யூதர்கள் தங்கள் பொருளாதார அமைப்புகளை வலிமையுடன் நிலைநிறுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

பல்லாயிரம் கோடி ரூபாய் நிதி திரட்டி இஸ்ரேலுக்கு உதவுவதோடு, அமெரிக்காவின் உள்நாட்டு அரசியலிலும் தங்களது அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்துவதற்குப் பணத்தை அள்ளிவீசும் யூதர்கள், தலைவர்கள் கூட்டமைப்பு (Presidents Conference) என்ற அமைப்பையும் உருவாக்கியுள்ளனர். பல்வேறு யூத அமைப்புகளின் தலைவர்கள் இதில் உறுப்பினர்கள். இஸ்ரேல் பிரச்சினையில் அமெரிக்க அதிபர்கள் - இந்த அமைப்பைச் சந்தித்து, அவர்களின் கருத்துக்களைக் கேட்ட பிறகே எந்த முடிவையும் எடுக்கிறார்கள். அதிகார மட்டத்தில் அந்த அளவுக்கு செல்வாக்கு படைத்த அமைப்பாக இது விளங்குகிறது. இந்தியாவில் பார்ப்பனிய ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் ஆலோசனையை பெற்றுத்தான் மோடி ஆட்சி செயல்படுகிறது.

1916-ல் உட்ரோ வில்சன், அமெரிக்காவின் குடியரசுத் தலைவர் ஆனதிலிருந்து, வெளியுறவுக் கொள்கையைத் தீர்மானிக்கும் நிர்ப்பந்த சக்திகளாக யூதர்கள் செயல்படத் துவங்கினர். வில்சனின் தேர்தல் செலவுக்கு, பெரும் தொகையை வழங்கிய யூதர்கள், வெற்றிக்குப் பிறகு தங்களுக்கு ஆதரவாக செயல்பட வேண்டும் என்று நிபந்தனை விதித்தனர்! இங்கிலாந்து, பிரான்ஸ்ஆகியவை ஒருபுறமும், ஜெர்மனி, துருக்கி போன்றவை மறுபுறமும் இருந்து நடத்திய முதல் உலகப் போரில், யூதர்களின் நிர்ப்பந்தத்தை ஏற்று, அமெரிக்க அதிபர் வில்சன், இங்கிலாந்துக்கு ஆதரவாக, அமெரிக்காவை போரில் ஈடுபடுத்தினார். இதன் விளைவாக - பாலஸ்தீனத்தில் யூதர்களுக்கு ஒரு தேசிய இருப்பிடம் ஏற்படுத்தப்படும் என்ற பிரகடனம் (பால்பர் பிரகடனம்) இங்கிலாந்து அரசால் வெளியிடப்பட்டது. போரிலிருந்து ஒதுங்கி இருந்த ஒரு நாட்டை, போரில் ஈடுபட வைத்து, அதன் மூலம் வேறு ஒரு நாட்டுக்கு அழுத்தத்தைக் கொடுத்து, தங்கள் தாயகத்துக்கு ஆதரவான ஒரு பிரகடனத்தை வெளியிடக்கூடிய அளவுக்கு, யூதர்களின் செல்வாக்குக் கொடி கட்டிப் பறந்தது. அதன்பிறகு அமெரிக்க அதிபர்களான பிராங்க்ளின் ரூஸ்வெல்ட், ஹேரி எஸ்.ட்ரூமேன், ஜான் எப். கென்னடி, லிண்டன் பி. ஜான்சன், ரிச்சர்ட் நிக்சன், ஜெரால்ட் ஃபோர்டு, ஜிம்மி கார்ட்டர், ஜார்ஜ் புஷ், கிளிண்டன் என ஒவ்வொருவர் ஆட்சியிலும் யூதர்களே, அரசியலை ஆட்டிப்படைக்கும் சக்திகளாக விளங்கினார்கள் என்பதற்கு ஏராளமான சான்றுகள் வெளிவந்திருக்கின்றன! இந்தியாவில் ஜம்மு காஷ்மீர் மாநிலத்துக்கு அரசியல் சட்டம் வழங்கியிருந்த 370வது சிறப்பு பிரிவை நீக்கி மாநில அந்தஸ்து உரிமையும் பறித்தது.

ரூஸ்வெல்ட், ட்ரூமேன் ஆகியோருக்கு ஆலோசகராகச் செயல்பட்டார் அமெரிக்க யூதர் தலைவரான ஃபெலிக்ஸ் - பிராங்க் ஃபர்ட்டர். அமெரிக்காவின் வெளியுறவுத் துறையை ஆட்டிப் படைத்து வருகிறவர்கள் யூதர்கள்தான். யூதக் கோட்பாட்டின் தீவிர ஆதரவாளர்கள் பலர், உயர்பதவிகளில் அமர்த்தப்பட்டனர். உதாரணமாக - வில்சன் பிரதமராக இருந்தபோது, அவருக்காகத் தேர்தலில் தீவிரமாகச் செயல்பட்டதற்காக, லூயி பிராண்டிஸ்என்ற யூதத் தலைவர், உச்சநீதிமன்ற நீதிபதியாக்கப்பட்டார். ரூஸ்வெல்ட் காலத்தில் - ஏராளமான யூதர்கள் அமெரிக்காவில் குடியேற உரிமை வழங்கப்பட்டது. ஐரோப்பாவிலிருந்து, ஒரு லட்சம் யூதர்களை, பாலஸ்தீனத்தில் குடியேறச் செய்வதற்கு, இங்கிலாந்து மூலம் வழிவகுத்தவர்தான் தீவிர யூத ஆதரவாளரான ட்ரூமேன். பாலஸ்தீனப் பிரச்சினையில் - அமெரிக்காவின் நேரடித் தலையீடு அப்போதுதான் தொடங்கியது. 1949 மே மாதத்தில் - இஸ்ரேல் என்ற சட்ட விரோத அரசை அய்.நா. அங்கீகரித்தது. அதே ஆண்டு ஜனவரி 25-ம் தேதி இஸ்ரேல் தேர்தலை நடத்தி ஆட்சியை அமைத்தவுடன், அடுத்த 6 நாட்களிலேயே இஸ்ரேலிய ஆட்சியை ட்ரூமேனின் அமெரிக்க அரசு அங்கீகரித்து, இஸ்ரேல் நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு, தனது நாட்டிலிருந்து யூத நிபுணர்களை அனுப்பி வைத்தது. 1961-ல் பதவிக்கு வந்த கென்னடி - இஸ்ரேலுக்குத் தனது வெளிப்படையான ஆதரவை முன் வைத்துத்தான் தேர்தல் பிரச்சாரத்தை நடத்தினார். இஸ்ரேலுக்கும் யூதர்களுக்கும் ஆதரவான, கென்னடியின் பேச்சைப் பல லட்சக்கணக்கில் அச்சிட்டு யூதர்கள் பாராட்டினர். கென்னடியின் மூன்று ஆண்டு ஆட்சிக் காலமும், யூதர்களின் செல்வாக்குக் கொடி கட்டிப் பறந்தது. தனது உதவியாளர் மையர் ஃபீல்டுமேன் என்பவரை, இஸ்ரேலுக்கு நேரடியாக அனுப்பி வைத்து, யூத அரசை உறுதிப்படுத்துவதற்கான அனைத்து உதவிகளையும் செய்தார் கென்னடி. இஸ்ரேலுக்கு ஏவுகணைகளையும் அவர் வழங்கினார். அய்.நா.வில் இஸ்ரேலுக்கு எதிராக, அதன் ‘சிரியா எதிர்ப்பு நடவடிக்கைகளுக்குக்” கண்டனத் தீர்மானம் வந்தபோது, கென்னடி அரசு கண்மூடித்தனமாக இஸ்ரேலை ஆதரித்தது.

1963-ல் பதவிக்கு வந்த ஜான்சன் ஆட்சியிலும் யூதர்களின் செல்வாக்கே தாண்டவமாடியது. தங்களுடைய அரசியல் - பணம் - பத்திரிகைச் செல்வாக்குகளைப் பயன்படுத்தி, யூதர்கள் அமெரிக்காவின் கொள்கையை நிர்ணயிப்பதில் பெரும் செல்வாக்கு செலுத்தி வருவதாக, அமெரிக்காவின் தலைமை ராணுவ அதிகாரி லெப்டினன்ட் ஜெனரல் பர்ன்ஸ் - வெளிப்படையாகவே குற்றஞ்சாட்டினார்.

(தொடரும்)

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# சுயமரியாதைத் திருமணம் : உயர்நீதிமன்றத்தின் விபரீத தீர்ப்பு

*(இந்து ஆங்கில நாளேட்டில் செப் 29, 2023ல் ஓய்வுபெற்ற பேராசிரியர் முனைவர் எஸ்.ஆனந்தி மற்றும் உதவிப் பேராசிரியர் எஸ்.சூர்யா இணைந்து எழுதிய கட்டுரையின் தமிழாக்கம்)*

***இந்து திருமணச் சட்டத்தில் திருத்தம் (1967, தமிழ்நாடு அரசு) கொண்டுவரப்பட்டு,கிட்டத்தட்ட 56 ஆண்டுகள் நிறைவடைந்துவிட்டன. ஆனால், இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகும், தமிழ்நாட்டைச் சேர்ந்த இளவரசன் என்ற இளைஞர், தான் செய்துகொண்ட சுயமரியாதைத் திருமணத்துக்குச் சட்டபூர்வ அங்கீகாரம் வழங்காமல், சென்னை உயர் நீதிமன்றம் அதை ஒரு குற்றச்செயலாகக் கருதும் என ஒருபோதும் நினைத்திருக்க மாட்டார்.***

**பழைய வழக்குகள்:** 1953இல் ‘சிதம்பரம் செட்டியார் எதிர் தெய்வானை ஆச்சி’ வழக்கில் இந்து மதச் சடங்குகளை முறையாகப் பின்பற்றவில்லை எனக் கூறி, அவர்களின் திருமணத்தைச் சட்டபூர்வமாக அங்கீகரிக்க மறுத்த அதே மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தின் செயலை இதனோடு ஒப்புநோக்க வேண்டும். 1953இல் இருந்த அதே நிலை இப்போது இல்லை என உறுதியாகக் கூறலாம். சமயச் சடங்கில்லாத் திருமணங்களை அங்கீகரிக்கும் சட்ட விதிகள் அப்போது மதராஸ் மாநில வரம்புக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

மேற்சொன்ன சிதம்பரம் செட்டியார் திருமண வழக்கில் (1953ஆகஸ்ட் 28), இந்து மத வழக்கப்படி ‘சப்தபதி’ எனும் சடங்குமுறை பின்பற்றப்படவில்லை என்றும், திருமணத்தின் போது புனிதத்தன்மை வாய்ந்த புரோகிதர் பங்கேற்கவில்லை என்றும் மனுஸ்மிருதியில் இருந்து நீதிபதிகள் மேற்கோள் காட்டினர். எனவே, இந்து மதத் திருமணச் சட்டத்தின்படி சடங்கு விதிகளைப் பின்பற்றாத சுயமரியாதைத் திருமணங்களுக்குச் சட்டபூர்வ அங்கீகாரம் வழங்க முடியாது என்று தீர்ப்பு வழங்கப்பட்டது. மேலும், இவ்வகைத் திருமண பந்தங்களில் பிறக்கும் குழந்தைகளை ‘முறைதவறிப் பிறந்தவர்’கள் என அக்குறிப்பில் பதிவுசெய்தனர்.

1958இல் மற்றொரு வழக்கு. ராஜாத்தி-செல்லையா இணையருக்குச் சுயமரியாதைத் திருமணம் நடைபெற்றிருந்த நிலையில், ’தாம்பத்ய உரிமைக் கோரி’ ராஜாத்தி என்பவர் திருச்சி மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார். ஆனால், அதை ஏற்க மறுத்த நீதிமன்றம், ராஜாத்தி-செல்லையா இணையருக்கு நடைபெற்ற சுயமரியாதைத் திருமணத்தையே கேள்விக்குள்ளாக்கி, இந்து திருமணச் சட்டத்தின்படி (1955) அதை அங்கீகரிக்க மறுத்தது.

ஓர் இளம் பெண்ணின் தாம்பத்ய உரிமைக் கோரும் மனுவை ஏற்றுக்கொள்ள இயலாத அவலநிலையைச் சுட்டிக்காட்டி, சுயமரியாதை இயக்கத்துக்குக் கண்டனம் தெரிவித்தது. இவ்விவாதக் கருத்துகள் எல்லாம் சீர்திருத்தத் திருமணங்கள் மீது தவறான அபிப்பிராயத்தைத் தோற்றுவித்தன.

திருமண அமைப்பில் பெண்கள் கீழாக மதிக்கப்படுவதைச் சுயமரியாதை இயக்கம் உரக்கச் சொன்னது. இதைச் சமாளிக்க, ஓர் ஆணும் பெண்ணும் திருமணப் பந்தத்துக்குள் நுழையும் முன்பு, ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுக்கொள்ளலாம். முரண்பாடு தோன்றும்பட்சத்தில் அவ்வுறவை முறித்துக்கொள்ளலாம் என்று அவ்வியக்கம் வாதிட்டது. ஆண்களிடையே பலதார முறை பின்பற்றப்படுவதைக் கண்டு, ஒவ்வொரு திருமணத்தையும் பதிவுசெய்ய வேண்டும் என சுயமரியாதை இயக்கத்தினர் குரல் கொடுத்தனர்.

ஆனால், ராஜாத்தியின் சுயமரியாதைத் திருமணத்தை அங்கீகரிக்க மறுத்த உயர் நீதிமன்றம், கணவனின் சொத்தில் அவருக்குப் பங்கு இல்லை என்று கைவிரித்துவிட்டது. இதன் தொடர்ச்சியாக 1967இல், இந்து திருமணச் சட்டத்தில் தமிழ்நாடு அரசு திருத்தம் கொண்டுவந்து, சுயமரியாதைத் திருமணத்துக்குச் சட்டபூர்வ அங்கீகாரம் வழங்கியது. இதன் பலனாக, 1969இல் மேல்முறையீடு செய்த ராஜாத்தியின் மனு ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவருக்கு மணவாழ்வு மீட்பளிப்பு உரிமை வழங்கப்பட்டது. பெரும் போராட்டத்துக்குப் பிறகு இச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட திராவிட இயக்கம் காரணமாக இருந்தது.

**சுயமரியாதை இயக்கத்தினரின் கோரிக்கை:** மதராஸ் மாநிலத்தில் மட்டுமின்றி, இந்தியா நெடுகிலும் அக்கால கட்டத்தில் இந்து சட்ட மசோதாவால் பெரும் சிக்கல் தீவிரமடைந்திருந்தது. 1944இல் பி.என்.ராவ் தலைமையிலான இந்து சட்ட அமைப்புக் குழுவினர், இந்தியாவின் பலதரப்பட்ட பகுதிகளுக்கும் சென்று மசோதா தாக்கல் செய்வதற்கான அடிப்படைத் தரவுகளைத் திரட்டினர். அப்போது சுயமரியாதை இயக்கச் செயல்பாட்டாளர்கள், “பெண்களுக்குச் சரிசமமான சட்ட உரிமை வழங்குவதையே நாங்கள் எதிர்பார்க்கிறோம்” என்றார்கள்.

சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்த குஞ்சிதம் குருசாமி, ‘இந்து’ என்கிற பதம் அனைவரையும் உள்ளடக்கியதாக இல்லை என்று, அச்சட்ட வரைவின் போதாமையை எடுத்துச் சொன்னார். அவரது கோரிக்கைகளை ராவ் குழுவினர் நிராகரித்தனர். 1947இல் வெளியான அக்குழுவின் அறிக்கையில் இச்செய்திகள் இருட்டடிக்கப்பட்டன.

ஆனால் வீர சைவம், பிரம்ம சமாஜம், ஆரிய சமாஜம், பிரார்தன சமாஜம் போன்ற அமைப்புகளின் திருமண முறைகளுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. இதன் விளைவாக, 1955இல் இயற்றப்பட்ட இந்து திருமணச் சட்டத்தில் மேற்சொன்ன இயக்கங்களின் சீர்திருத்தத் திருமணங்கள் மட்டுமே முறையான திருமணங்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டன.

1955 இந்து திருமணச் சட்டத்தின் 7ஆவது பிரிவின்படி, இந்து மதச் சம்பிரதாயங்களில் குறிப்பிடப்படும் ‘சப்தபதி’ வலம் வருதல், ‘தாலி’ கட்டுதல் போன்ற சடங்குகளை முறையாகப் பின்பற்றும் திருமணங்களே ஏற்றுக்கொள்ளப்படும். அதை மீறி மந்திரங்கள் இல்லாத, புரோகிதர்கள் கலந்துகொள்ளாத திருமணங்களுக்கு அங்கீகாரம் கிடையாது.

சுயமரியாதைத் திருமணத்தை 1954ஆம் ஆண்டின் சிறப்புத் திருமணச் சட்டத்தில் பதிவுசெய்யுமாறு நாடாளுமன்றமும் நீதிமன்றமும் ஒருமித்துக் குரல் கொடுத்தன. அச்சமயத்தில், குடும்பச் சொத்துப் பங்கீட்டு விவகாரம் பற்றி அதிகம் சிந்திக்காமல், அவசரகதியில் இச்சட்ட மசோதா நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. இதனால், திருமணமான தம்பதிகளுக்கு மூதாதையரின் சொத்து கிடைக்காமல் போகவும் வாய்ப்பு உண்டு என்பதே அப்போதைய நிலை.

1953இல் ‘தெய்வானை ஆச்சி எதிர் சிதம்பரம்’ வழக்கு ’மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தில்’ பதிவுசெய்யப்பட்டது. நீதிமன்றத்தால் அப்போது எதுவும் செய்ய முடியவில்லை என்றாலும், மாகாணத்தின் ஆளும் காங்கிரஸ் அரசாங்கத்துக்கு ஒரு கோரிக்கை வைத்தது. சமயச் சார்பற்ற திருமண முறையைப் பின்பற்றுவோரைச் சட்டபூர்வமாக அங்கீகரிக்கவும், அவர்களது சொத்துரிமையைப் பாதுகாக்கவும் சிறப்பு விதிகள் கொண்டு வர வேண்டும் என்று ஆளும் அரசுக்குப் பரிந்துரைத்தது.

ஆகவே 1953இல், மெட்ராஸில் காங்கிரஸ் அரசாங்கம் ‘இணக்கமற்ற இந்து திருமணப் பதிவு மசோதா 1954-ஐ அறிமுகப்படுத்தத் தீர்மானித்தது. அந்த மசோதா மீதான விவாதங்கள் எழுந்த நிலையிலும், கடைசி நேரத்தில் காங்கிரஸ் அரசாங்கம் தன் முடிவை மாற்றிக்கொண்டு மசோதாவை ரத்து செய்தது.

1954ஆம் ஆண்டின் சிறப்புத் திருமணச் சட்டத்தில் சுயமரியாதைத் திருமணத்தை இணைக்க வேண்டியிருப்பதால், தாம் அதைத் தவிர்த்ததாக அரசுத் தரப்பில் சொல்லப்பட்டது. 1959இல் திமுகவைச் சேர்ந்த எஸ். எம்.அண்ணாமலை, ‘மெட்ராஸ் சுயமரியாதைத் திருமணம் செல்லுபடி மசோதா’வைப் பின்னோக்கு விளைவுடன் சட்டபூர்வ அங்கீகாரத்துக்காகக் கொண்டுவந்தார்.

ஆனால், காங்கிரஸார் பலத்த எதிர்ப்புத் தெரிவித்தனர். கம்யூனிஸ்ட், பிரஜா சோஷலிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் நடுநிலையாக மௌனம் காத்ததால், மசோதா தோல்வியடைந்தது. 1965இல் திமுக மீண்டும் முயன்றது. இம்முறை எஸ்.மாதவன் (பிறகு திமுக அமைச்சர்) என்பவர் மசோதாவைத் தாக்கல் செய்தார். சுயமரியாதைத் திருமணத்தை இந்து சட்டத்துக்குள் கொண்டுவந்து, அதனைச் செல்லுபடியாக வைப்பதே அவர்களின் பிரதான நோக்கமாக இருந்தது.

இத்திருமணங்களை அங்கீகரிக்க மறுத்தால், இதன்படி திருமணம் செய்த பெண்களின் எதிர்கால வாழ்க்கை மோசமாகிவிடும் என திமுக வாதாடியது. இந்து சட்டத்தின்கீழ் ஒப்புதல் கிடைத்துவிட்டால், சுயமரியாதைத் திருமணம் செய்துகொண்ட பெண்கள் விவாகரத்து பெறவும், பலதார மணம்புரிந்த கணவர்களிடமிருந்து விடுதலை பெறவும் வழி கிடைத்துவிடும் என்று எண்ணினார்கள். ஆனால், பலகட்ட முயற்சிக்குப் பிறகும்கூட மசோதா துளியும் நகரவில்லை.

**செய்துகாட்டிய திமுக அரசு:** 1967 தேர்தலில் பெரும் வாக்கு வித்தியாசத்தில் திமுக வெற்றி பெற்று, தமிழ்நாட்டின் ஆளுங்கட்சியாக உருவெடுத்த பிறகுதான், அந்த மசோதா புத்துயிர் பெற்றது. 7ஏ என்கிற பிரிவின் கீழ், இந்து திருமணச் சட்டம் 1967 (தமிழ்நாடு அரசால் திருத்தம் செய்யப்பட்டது) அறிமுகப்படுத்தப்பட்டது. இச்சட்டத்தின் மூலம் சடங்கில்லாத் திருமணங்கள் அங்கீகரிக்கப்பட்டதுடன், பாரம்பரியப் பார்ப்பனிய வழித் திருமணங்கள் கேள்விக்குள்ளாகின. இச்சட்டத்திருத்தத்தால் ஒன்றிய அரசும் நீதித் துறையும் பெருத்த கலக்கம் அடைந்தன.

சீர்திருத்தத் திருமணங்களை அங்கீகரிக்க மறுப்பதோடு அவை சம்பிரதாயத்துக்கு எதிரானவை என்றும் தொடர்ச்சியாக விமர்சித்துக்கொண்டிருந்தனர். தமிழ்நாட்டில் மகளிர் சார்ந்த சீர்திருத்தச் சட்டங்களில், சென்னை உயர் நீதிமன்றத்தின் பங்கு அளப்பரியதாக இருந்துள்ளதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். மற்றெந்த இந்திய நீதிமன்றங்களைக் காட்டிலும், பாலின உரிமை சார்ந்து பல முற்போக்கான தீர்ப்புகளை இந்த நீதிமன்றம் வழங்கியுள்ளது. திருநர்களின் திருமண அங்கீகாரத்தை, இந்து திருமணச் சட்டத்தின் கீழ் கொண்டுவந்தது, அதன் அசாத்திய பணிக்கான மற்றுமொரு எடுத்துக்காட்டு.

(‘இந்து’ நாளேடு – செப் 29,2023)

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : November 24, 2023

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran